# கிழக்கத்திய கம்பா (Khampa Eastern)

**வசிப்பிடம்:** சுமார் 13 லட்சம் திபெத்தியர்கள் கிழக்கத்திய கம்பா மொழியைப் பேசுகிறார்கள். இவர்கள் மிகப்பரந்த பகுதியில் வசிக்கின்றனர்; முக்கியமாக சிசுவான் மாநிலத்தின் மேற்கு பகுதியிலிருந்து கிழக்கில் கங்திங்(Kangding) வரைக்கும், கிழக்கு திபெத்தின் ஒரு பெரிய பகுதியையும்; சிங்ஹாய் (Qinghai) மாநிலத்தின் சில பகுதிகளையும் வசிப்பிடமாக கொண்டுள்ளார்கள்.

பூட்டானிலும், நேபாளத்திலும், இந்தியாவிலும் அநேக ஆயிரம் கிழக்கு கம்பா அகதிகள் வாழ்ந்துவருகின்றனர். இந்த நாடுகளில் இவர்கள் திபெத்தியர்கள் என மட்டுமே பிரிக்கப்பட்டுள்ளதால் இவர்களுடைய சரியான எண்ணிக்கையை அறிவது கடினம். சீனாவில் கிழக்குக் கம்பா பட்டணமாகிய லீதாங் (Litang) 4,700 மீட்டர்கள் (15,400 அடிகள்) உயரத்தில் உள்ளது. சம்தோ (அல்லது சங்தோ (Changdu)) 3,200 மீட்டர்கள் (10,500 அடிகள்) உயரத்தில் உள்ள மற்றொரு முக்கியப் பட்டணமாகும். சம்தோ புத்த மடம் கி.பி. 1473 ல் கட்டப்பட்டது, இதில் 2,500 புத்த துறவிகள் தங்கியுள்ளனர். பாதாங் (Batang) மற்றும் 2,700 மீட்டர்கள் (8,856அடிகள்) உயரத்திலுள்ள பாயி (Bayi) பட்டணங்கள் மற்ற முக்கியப் பட்டணங்களாகும்.




**அடையாளம்:** இவர்களுடைய முரட்டாட்டமான மற்றும் ஆவேசமான சுபாவத்தினால் இவர்கள் திபெத்தியர்கள் மத்தியில் கொடூரமானவர்கள் எனப் பெயர் பெற்றுள்ளனர். 'உயரமான நல்ல உடலமைப்போடும் இருபுறமும் தொங்கும் சடைப் பின்னலோடு அச்சமற்ற சுபாவமுடைய இவர்கள் செவ்விந்தியர்களைப் போலத் தோற்றமளிக்கின்றனர்.'

**மொழி:** கம்பா மொழிகள் மத்தியில் பரவலாகப் பேசப்படும் வகை கிழக்கு கம்பா வகையாகும். இம்மொழியில் எட்டு வட்டார மொழி வழக்குகள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

**வரலாறு:** கம்பாக்கள் பக்தி வைராக்கியமுடைய திபெத்திய புத்த மதத்தினர் ஆவார்கள். கி.பி. 1720 ல் பெரும்பாலான கம் மாநிலப் பகுதிகளை சிசுவனோடு இணைத்த சீனர்களோடு இவர்களுக்கு நீண்ட யுத்த வரலாறுண்டு. இன்றைய நாள் வரையும் 'கொலைசெய்யப்படும் பயத்தில் சீனர்கள் யாரும் இவர்கள் பகுதியில் நுழையத் துணிவதில்லை. 'கம்பா மக்களுக்கும் சீன இராணுவத்திற்கும் கி.பி.1918 , கி.பி.1928 மற்றும் கி.பி.1932 ல் மோதல் ஏற்பட்டது. கி.பி.1950 ல் சீனர்கள் ஒரு தோட்டா கூடச் சுடாமல் சம்தோவைக் கைப்பற்றினர். சீன இராணுவம் பட்டாசுகளைக் கொண்டு புறநகர்ப்பகுதியில் ஒரு பெரிய வானவேடிக்கை செய்தது, கம்பா மக்கள் பீதியில் பட்டணத்தைவிட்டு ஓடிவிட்டனர். பின்பு கி.பி. 1955 ல் சீன அதிகாரிகள் லீதாங் புத்த மடத் துறவிகளை மடத்தின் சொத்து மற்றும் பொருட்கள் விவரத்தை வரி மதிப்பீட்டிற்காகத் தரும்படி கேட்டபோது துறவிகள் இணங்க மறுத்துவிட்டனர். கி.பி. 1956 ல் சீன இராணுவம் மடத்தை முற்றுகையிட்டது, ஆயிரக்கணக்கான துறவிகள் மற்றும் விவசாயிகள் மடத்தின் பாதுகாப்பிற்காக விவசாயக் கருவிகளோடு நின்றனர். சீன விமானங்கள் லீதாங் மற்றும் சுற்றியுள்ளப் பகுதிகளில் குண்டு வீசின. லாசாவில் வாழும் கம்பாக்கள் கி.பி. 1959 ல் சீன ஆட்சிக்கு விரோதமாக ஒரு போராட்டத்திற்கு ஆயத்தம் செய்தனர். 'மதப்பற்றால் பிடிக்கப்பட்ட திபெத்தியர்கள் ஜீவனைப் பற்றியும் மரணத்தைப்பற்றியும் கவலைப்படாத நிலையில் போராட்டம் மூன்று நாள் தொடர்ந்தது.'

**கிறிஸ்துவம்:** கம்பா மக்கள் மத்தியில் கத்தோலிக்கர்களுடைய பணி கி.பி. 1800 ல் துவங்கியது. கத்தோலிக்க மிஷன் கட்டிடம் கி.பி. 1873 ல் இடிக்கப்பட்டது. கி.பி. 1905 ல் மறுபடியும் இடிக்கப்பட்டது. இரண்டு பாதிரியார்கள் கொல்லப்பட்டனர் மற்றும் விசுவாசத்தைக் கைவிட மறுத்த விசுவாசிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கி.பி. 1924 ல் மிஷன் வளர்ந்து இரண்டு பாதிரியார்களையும் 15 பிரெஞ்சு மிஷனெரிகளையும் 4,800 விசுவாசிகளையும் உடையதாக மாறியது. விசுவாசிகளில் ஐந்தில் இரண்டுபேர் திபெத்தியர்களாயிருந்தனர். இந்நாட்களில் சுமார் 200 கத்தோலிக்க விசுவாசிகள் கங்திங்கிற்கு அருகாமையிலும், பாதாங் மற்றும் யாச்யாங் (Yajiang) பட்டணங்களுக்கு அருகாமையிலும் வசிக்கின்றனர். கம்பா மக்கள் மத்தியில் பிராட்டஸ்டன்ட்களின் பணி கி.பி.1897 ல் துவங்கியது. இந்த மிஷனெரிகள் மூலம் மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் அனாதை ஆசிரமங்கள் நடத்தப்பட்டாலும், இவர்கள் குறைவான பலனையே கண்டார்கள். கி.பி. 1922 ல் பாதாங்கிலுள்ள பிராட்டஸ்டன்ட் பணித் தளம் இரண்டுபேரை விசுவாசத்திற்குள் நடத்தியது.




**Population:**
1,246,200 (2000)
1,535,200 (2010)
1,891,300 (2020)

**Countries:** China, Bhutan, India, Nepal

**Buddhism:** Tibetan

**Christians:** 400

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Kham, Khams, Khams-Yal, Khams-Bhotia, Kam, Khamba, Kang, Konka, Konkaling

**மக்கள்தொகை:** 9,56,700 in China; 1,000 in Bhutan (1995, Languages of Bhutan); Also in India and Nepal

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, வட திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 8 (Dege, Karmdzes, Chamdo, Braggyab, Nyingkhri, Batang, Nyagchu, and an unnamed dialect)

**திபெத்திய புத்தமதம்:** 95%

**கிறிஸ்துவம்:** 0.1%

**வேதாகமம்:** சில பகுதிகள் கி.பி.1862, புதிய ஏற்பாடு கி.பி. 1885, திபெத்திய பைபிள் கி.பி. 1948

**இயேசு திரைப்படம்:** உண்டு

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** Kham, Khamba

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL குறியீடு : KHG

**கிறிஸ்துவத்தின் நிலை**

